03.06.2022 CC. 123/2015 PW1 திருமதி. சேதுனி

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 8 பேர்கள். அதில் நாங்கள் 5 பேர்கள் பெண்கள், 3 பேர் ஆண்கள். எனது அப்பா இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நானும் எதிரிகளும் ஒரே ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பமும் எதிரிகளின் குடும்பமும் புனித காணிக்கை அன்னை திருதலத்தில் உறுப்பினராக உள்ளோம். ஆலயத்தின் நிர்வாகிகளுக்கு இரண்டு குடும்பத்தாரையும் பற்றியும் தெரியும் என்றால் சரிதான். எங்கள் திருமணம் இருவீட்டாரின் சம்மதத்துடன் அவர்கள் நிச்சயித்த படி நடந்தது. காதல் திருமணம் அல்ல. திருமணத்தை எனது அண்ணன் ஜெஸ்ரின் ராஜ் மற்றும் அண்ணனின் நண்பர் ஒருவர் 1 வது எதிரியின் சித்தப்பா அல்போன்ஸ் மூலம் எங்களது திருமணத்தை பேசி முடித்தார். எதிரியின் சித்தப்பாவை போலீசார் இந்த வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் எதிரியின் சித்தப்பா திருமணத்தை பேசி முடித்ததை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

நான் கொடுத்த புகார் மனுவில் எதிரியின் சித்தப்பா திருமணத்தை பேசி முடித்து வைத்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை சாட்சியத்திலும் போலீஸ் விசாரணையின் போதும் எதிரியின் சித்தப்பா திருமணத்தை நடத்தி வைத்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஒரே கோவிலை சார்ந்தவர்கள் ஆதலால் ஞானஸ்நானம் கொடுப்பதில் பெரிய பிரச்சினை இருக்காது என்றால் சரிதான். ஆனால் எனது பெயரை எதிரிகளின் குடும்ப அட்டையில் சேர்க்காததால் ஞானஸ்நானம் கொடுப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. எனது அண்ணன் சம்பவ காலகட்டத்தில் குளச்சல் நகராட்சியில் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் கவுன்சிலராக இருந்தார். எங்ளகள் குடும்பம் செல்வாக்கான குடும்பம் என்றால் சரியல்ல. நாங்கள் நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவர்கள். எங்களது குடும்ப உறுப்பினர்கள் புனித காணிக்கை அன்னை திருதலத்தில் நிர்வாகிகளாக இருந்தார்கள்

என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு ஒன்றரை வருடங்கள் கழித்து பிஷப் ஹவுசில் பேசி நான் ஞானஸ்நானம் கொடுத்தேன். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு எந்த நிபந்தனையும் ஆலயத்தில் விதிப்பதில்லை என்றால் சரியல்ல. குடும்ப அட்டை இருக்க வேண்டும்.

எனது குழந்தையும் ஞானஸ்நானம் கொடுத்த ஞான தந்தையின் பெயர் போர்ஜியோ ஆகும். மேற்படி போர்ஜியோ எனது அக்காவின் கணவர். எனக்கும் 1 வது எதிரிக்கும் இடையேயான பிரச்சினைக்கு காரணம் போர்ஜியோ என்றால் சரியல்ல. எனது அக்காளை போர்ஜியோவிற்கு பேசி முடிக்கும் போது எனது போட்டோவை அனுப்பி திருமணம் பேசி முடித்தார்கள் என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் போது எனது கணவர் எங்கிருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. பொதுவாக குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் போது அப்பா, அம்மா இருவரும் இருக்க வேண்டும் என்றால் அது அவரவர் விருப்பம். எனது கணவர் திருமணம் முடிந்து இரண்டரை மாதத்தில் வெளிநாடு சென்று விட்டார். 1 வது எதிரி தான் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்று சொன்ன பிறகும் நான் அதை கேட்காமல் போர்ஜியோ என்பவரை வைத்து ஞானஸ்நானம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு இரண்டு ஞானஸ்நான சான்றிதழ் உள்ளது என்றால் சரியல்ல. முதலில் உள்ள ஞானஸ்நான சான்றிதழில் போர்ஜியோ பெயர் காணப்பட்டது என்றாலும் பின்னர் செல்வாக்கை பயன்படுத்தி அந்த பெயரை எடுத்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. நான் எனது கணவர் வெளிநாடு செல்லும் முன் அவருடன் சந்தோமாக வாழ்க்கை நடத்தினேன். அந்த இரண்டரை மாதத்தில் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் கிடையாது. எனது கணவரது குடும்ப உறுப்பினர்களுடனும் அந்த இரண்டரை மாத காலகட்டத்தில் எந்த பிரச்சினையும் கிடையாது.

எனது கணவர் மார்ச் மாதத்தில் வெளிநாடு சென்று விட்டு ஆகஸ்ட் மாதத்தில் ஊருக்கு வந்துவிட்டார். அந்த இடைப்பட்ட காலத்தில் எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. எனது கணவர் ஆகஸ்ட் மாதம் ஊருக்கு வந்த பிறகு செப்டம்பர் மாதத்தில் எனக்கு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த 15 நாட்களுக்குள் எனது கணவர் வெளிநாடு சென்றுவிட்டார். குழந்தை

பிறந்து எனது கணவர் மீண்டும் வெளிநாடு செல்லும் வரையிலும் எனக்கும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் எந்த பிரச்சினையும் கிடையாது. அதன் பிறகு எனது கணவர் ஊருக்கு எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. அதற்கு இடையில் எனக்கும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்ததாக அவரது சித்தப்பா சொன்னார். அவர் வெளிநாடு சென்ற பிறகு என்னை எனது உறவினர்கள் என்னையும் எனது குழந்தையையும் எதிரிகளின் வீட்டில் கொண்டு விட்டார்கள்.

அப்போது எனக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது என்று என்னை மனதளவில் கொடுமை படுத்தினார்கள். நான் மேற்படி விவரத்தை புகார் மனுவிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்த தேதி 22.06.2014 என்றால் எனக்கு ஞாபகமில்லை. குழந்தை பிறந்து 3 மாத காலம் வரை எங்கள் குடும்பத்தாருக்கும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. 13.02.2013 எனது அண்ணன், தம்பி கினோ ஆகியோர் எதிரிகளின் வீட்டிற்கு சென்று 2வது எதிரியை அடித்து காயப்படுத்தியதில் அவர் ஜே. பி. ஆர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. 13.02.2013 அன்று எனது சகோதரர்கள் எனது மாமியாரை அடித்து காயப்படுத்திவிட்டு என்னை வீட்டிலிருந்து அழைத்துச்சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு 2013ம் வருடம் மார்ச் மாத தொடக்கத்தில் 1வது எதிரியின் அம்மா, சகோதரிகள் 2 பேர்கள் சேர்ந்து என்னை வீட்டிலிருந்து வெளியே விரட்டி விட்டார்கள். நான் மேற்படி விவரத்தை முதன் முதலாக இந்நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடமும் சொல்லியுள்ளேன். அதன் பிறகு தான் நான் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் ஞானஸ்நானம் கொடுத்த விவரத்தை எனது கணவரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2013ம் வருடம் மார்ச் மாத தொடக்கத்தில் 1ம் எதிரியின் அம்மா, சகோதரிகள் என்னை வீட்டிலிருந்து விரட்டி விட்ட பிறகு 2 நாட்கள் 1வது எதிரி என்னிடம் பேசினார். கூடுதல் வரதட்சணை கேட்டு எதிரிகள் என்னை கொடுமைப்படுத்தியதாக நான் இந்த வழக்கில் கூறியுள்ளேன். போலீசார்

இறுதி அறிக்கையில் வரதட்சணை கொடுமை எதுவும் நிகழவில்லை என்றும் ஞானஸ்நானம் கொடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது 75 பவுன் தங்க நகைகள் 1 வது எதிரிக்கு 5 பவுனில் தங்க செயின் 1 பவுன் மோதிரம் ஆகியவற்றை எனது அம்மா கொடுத்தார்கள்.

எனக்கு 45 பவுன் தங்க நகைகள் கொடுத்தார்கள் என்றாலும் அந்த நகைகளும் எதிரிகள் எனக்கு அணிவித்த நகைகள் மற்றும் எதிரிகளின் நகைகளையும் சேர்த்து நான் தான் வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் மனுவில் 75 பவுன் தங்க நகைகள் எனக்கு எனது பெற்றோர் அணிவித்ததாக கூறிய போதிலும் போலீஸ் விசாரணையில் 50 பவுன் தங்க நகைகள் அணிவித்ததாக மாறுபட்டு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக கடற்கரை கிராமங்களில் பிழைப்பு மதி கொடுக்கும் வழக்கம் உண்டு என்றால் சரியல்ல. எதிரி திருமணத்தின் போது கடன் இருப்பதாக சொன்னதால் எங்கள் வீட்டிலிருந்து எதிரிகளுக்கு ரூபாய்5 இலட்சம் கொடுத்தார்கள். நான் மேற்படி கடன் இருந்ததாக சொல்லும் விவரத்தை புகார் மனுவிலும், போலீஸ்விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் 8 நபர்களை எதிரிகளாக கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். ஆனால் அதில் 6 நபர்களை கழித்து விட்டு போலீசார் 2 நபர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் எனக்கும் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு நாகர்கோவில் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த மனு எண் எம்.சி. எண் 49/2015 என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 23.02.2017 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஜீவனாம்ச வழக்கு தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் சாட்சி சொன்னேன். மேற்படி தள்ளுபடியான உத்ரவு மீது நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தள்ளுபடியான விவரம் தெரியாது. அந்த வழக்கில் நான் எந்தவித காரணமும் இல்லாமல் 1 வது எதிரியை தன்னிச்சையாக பிரிந்து வாழ்வதால் எனக்கும் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கிடைக்கதக்கது அல்ல என்று கூறி தள்ளுபடியாகிவிட்டது

என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சாட்சி செல்லம்மா எனது அம்மா. சாட்சி ஜெஸ்டின் எனது அண்ணன். சாட்சி கினோ எனது தம்பி. சாட்சி மிக்கேல் அடிமை எனது தாய் மாமா. சாட்சி பிராங்கிளின் எனது பெரியம்மாவின் மருமகன்.

எதிரிகளின் வீட்டின் பக்கத்தில் உள்ளவர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் குழந்தை பிறந்து எதிரிகளின் வீட்டிற்கு சென்ற பிறகு பிரச்சினை வந்தது. அதன் பிறகு 1 வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு 3 மாதங்கள் 1 வது எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தேன். நான் எனது முதல் விசாரணையில் சொன்ன விவரமான ஒரு நாள் இரவு எனது மாமியார் என்னையும் எனது குழ்தையையும் வெளியில் அனுப்பி விட்டதாகவும் அப்போது எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததாகவும், நான் எனது அண்ணனுக்கு போண் செய்ததாகவும், எனது அண்ணன் என்னை வந்து அழைத்துச் சென்றார் என்ற விவரத்தையும் நான் புகார் மனுவிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போண் செய்து எனது அண்ணனை கூப்பிடவில்லை. நான் 12ம் வகுப்பு முடித்துவிட்டு டிப்ளமோ படித்துள்ளேன். நான் எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளான, 28 நாட்கள் கழித்து லீமா றோஸ் மற்றும் பெரியவர்கள் பேசி என்னை எனது கணவர் வீட்டில் கொண்டு போய்விட்டதாகவும், அதன் பின்பு என்னை எனது கணவர் வீட்டில் கொடுமைப்படுத்தியதாகவும் கூறிய விவரத்தை நான் புகார் மனுவிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(வேறு நீதிமன்ற பணிகள் காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது)